NMMS MAT

BLOOD RELATIONSHIP PROBLEMS

NAME :

WORK SHEET : 22

1) ஒரு பையனைப் பார்த்து கண்ணன் , "இவன் என் தாயின் ஒரே மகளின் மகன் ", என்று கூறுகின்றான் . அவ்வாறெனில் கண்ணன் அந்த பையனுக்கு என்ன உறவு ?

a) மகன் b) பேரன் c)பாட்டன் d)தந்தை

2) ஒரு நபரை பார்த்து ராமு, "அவர் என் தந்தையின் மாமாவின் மகன் " , எனக் கூறினார் . எனில் அவர் ராமுவுக்கு என்ன உறவு ?

a) சித்தப்பா/ பெரியப்பா b) சகோதரன்

c) மருமகன் d) உடன்பிறவா சகோதரன்

3) ஒரு நபரைப் பார்த்து ரகு , "அவன் என்னுடைய தாயின் தாய்மாமனின் மகன்", எனக் கூறினான். எனில் ரகுவிற்கு அவர் என்ன உறவு ?

a) சகோதரன் b) சித்தப்பா/ பெரியப்பா

c) உடன்பிறவா சகோதரன் d) தாய்மாமன்

4) பாலா என்பவர் ராணியை குறித்து கூறும்போது "அவளுடைய தாயின் ஒரே மகள் எனக்கு தாய் ஆவார்" எனக் கூறினார். எனில் பாலா ராணிக்கு என்ன உறவு ?

LIVEWORKSHEETS

a) சகோதரன் b) மகன் c) மருமகன்

d) உடன்பிறவா சகோதரன்

5) M யின் மகன் Q, N னை மணந்தார்.N னின் தங்கை O, P யை மணந்தார். P என்பவர் Q யின் சகோதரர். O விற்கும் M ற்கும் உள்ள உறவு என்ன ?

a) சகோதரி b) மருமகள் c) பேத்தி d) மகள்

6) நபர் B யின் சகோதரர் A . மேலும் A யின் தந்தையின் சகோதரி C .எனில் , C என்பவர் Bக்கு எவ்வகையில் உறவு ?

a) பாட்டி b) தாய் c) அத்தை

d) உடன்பிறவா சகோதரி

7) தீபக்கின் சகோதரர் விமல். விமல் என்பவர் பிரேமின் மகனாவார். ராஜா என்பவர் பிரேமின் தந்தையாவார். விமல் என்பவர் ராஜாவிற்கு எவ்வகையில் உறவு ?

a) மகன் b) பேரன் c) சகோதரன் d) தாத்தா

8) A என்பவர் B மற்றும் C யின், D என்பவர் A யின் சகோதரி. A யின் அத்தை E .எனில் E இன் சகோதரி?

a) D b) B c) C

d) போதுமான தகவல் இல்லை

9) ஒரு பெண் குழந்தையைப் பார்த்து வசந்த்,"இவள் என்னுடைய தந்தையின் ஒரே குழந்தையின் மகளாவார்", எனக் குறிப்பிடுகிறார். அவ்வாறெனில் வசந்தின் மனைவியை அந்தப் பெண் குழந்தை எவ்வாறு அழைக்கும் ?

LIVEWORKSHEETS

a) மகள் b) அம்மா c) பேத்தி d) பாட்டி

10) கணேஷ் ஒரு சிறுவனை காட்டி ,"அவன் என் தந்தையின் மனைவியின் ஒரே மகனின் மகன்" எனக் கூறினார். கணேஷிற்க்கு அச்சிறுவனிடம் உள்ள உறவு யாது ?

a) தாத்தா b) மாமா c) தந்தை

d) கொள்ளுத்தாத்தா

LIVEWORKSHEETS